# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**முன்னிலை : திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல் முறையீட்டு மனு எண் 29 / 2016**

திரு. M. இளங்கோவன்,
த/பெ முருகப்படையாச்சி,
பெரியாக்குறிச்சி அஞ்சல்,
செந்துறை வட்டம்,
அரியலூர் மாவட்டம் – 621 719. ..... மேல் முறையீட்டாளர்
(திரு. M. இளங்கோவன்)

எதிர்

1. செயற்பொறியாளர்/ இ&ப/அரியலூர்,
பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
56, ராஜாஜி நகர், கல்லூரி சாலை,
அரியலூர் – 621 713.

2. உதவி செயற்பொறியாளர்/இ&ப/செந்துறை,
பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11 கே.வி. துணை மின் நிலைய வளாகம்,
செந்துறை அஞ்சல் & தாலுகா,
செந்துறை – 621 714.

3. உதவி பொறியாளர்/ இ&ப/செந்துறை,
பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11 கே.வி. துணை மின் நிலைய வளாகம்,
செந்துறை அஞ்சல் & தாலுகா,
செந்துறை – 621 714. ...... எதிர் மனுதாரர்கள்

( திரு. த. தேவேந்திரன், செயற்பொறியாளர்/அரியலூர்‘
திரு. M. கணேசன், உதவிசெயற்பொறியாளர்/செந்துறை மற்றும்
திருமதி. ஆ. செல்லப்பாங்கி, உதவி பொறியாளர்/செந்துறை )

**கேட்புரை நாள் – 23 .6. 2016**

**ஆணை நாள் – 29. 7. 2016**

திரு. M. இளங்கோவன், த/பெ முருகப்படையாச்சி, பெரியாக்குறிச்சி அவர்களின் 23.3.2016 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண். 29/2016 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 23.6.2016 அன்று நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**ஆணை**

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டை ஏற்றும் ஆழ்துளை கிணறு அமைத்து குழாய் அமைக்க உண்டான செலவை கருதியும் அவரது பெயருக்கு விவசாய மின் இணைப்பை வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

**2. வழக்கின் சுருக்கம்:**

2.1 திரு. த. முருகேசன் த/பெ முருகபடையாச்சி அவர்கள் தனக்கு சொந்தமான பெரியாக்குறிச்சி வருவாய் கிராம புல எண்.324/8Cல் அமைந்துள்ள ஆழ்குழாய் கிணற்றிற்கு 10 HP விவசாய மின்இணைப்பு வேண்டி விண்ணப்பத்தை பதிவு செய்துள்ளார். விண்ணப்ப பதிவு எண்.121/29.5.1989 ஆகும்.

2.2 மேற்கண்ட விவசாய விண்ணப்பத்திற்கு தயார் நிலையை பதிவு செய்ய 29.10.2010 அன்று அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

2.3 மேற்கண்ட விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பத்தை தன்னுடைய பெயருக்கு மாற்றம் செய்ய வேண்டும் என்று திரு. மு. இளங்கோவன் அவர்கள் பெரம்பலூர் மின் பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார். மன்றம் அவருடைய மனுவை தள்ளுபடி செய்துவிட்டது.

2.4 மேற்கண்ட தீர்வில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளர் முன்பாக இந்த மேல்முறையீட்டை சமர்ப்பித்துள்ளார்.

**3.0 <u>மன்றத்தின் தீர்வு</u>:**

பெரம்பலூர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 24.2.2016 நாளிட்ட ஆணையில் வழங்கியுள்ளது. அந்த ஆணையின் சம்பந்தபட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"<u>தீர்ப்பு</u>:*

*1) இருதரப்பு வாதங்களும் பரிசீலிக்கப்பட்டது. மன்ற உறுப்பினர்கள் பொது அதிகார ஆவணத்தின்படி பட்டா மாற்றம் செய்யஇயலாது என தெரிவித்தனர். மேலும், கிரையப் பத்திரம் திரு. இளங்கோவன் பெயரில் இல்லை. எனவே, திரு. ராஜாங்கம் அவர்களுக்கு திரு. முருகேசன் அவர்களால் கிரையம் கொடுக்கப்பட்ட நிலத்தில் உள்ள ஆழ்குழாய் கிணற்றிற்கு திரு. இளங்கோவன் பெயரில் விவசாய மின் இணைப்பு வழங்க பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் திரு. இளங்கோவன் பெயரில் பெயர் மாற்றம் செய்ய இயலாது என இம்மன்றம் தீர்ப்பளிக்கிறது. "*

**4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்</u>:**

4.1 மேல்முறையீட்டாளர் பெரியாக்குறிச்சி கிராம புல எண்.324/8Cல் உள்ள ஆழ்குழாய் கிணற்றில் உள்ள மின்னிணைப்பு பெற திரு. முருகேசன் பெயரிலிருந்து அவரது பெயருக்கு பெயர் மாற்றம் (name transfer) செய்து மோட்டார் பதிவு செய்ய ஆவண செய்யும்படி விண்ணபித்திருந்தார்.

4.2 மின்வாரிய தரப்பில் திரு. முருகேசன் அவர்கள் பெரியாக்குறிச்சி கிராம புல எண்.324/8Cல் உள்ள கிணற்றுக்கு மின்னிணைப்பு வேண்டி விண்ணப்பப பதிவு எண்.121/29.5.1989 ன்படி பதிவு செய்து இருந்தார் எனவும், மேற்படி நிலத்தினை திரு. ராஜாங்கம் அவர்களுக்கு 25.1.2007 அன்று கிரையம் செய்தார் எனவும் திரு. ராஜாங்கம் அவர்கள் மேற்படி சொத்துக்களை ஈடு, ஒத்தி, ஜாமின், கிரையம் செய்வதற்கு பொது அதிகார ஆவணம் (Power of attorney) அளித்திருந்தார். அதன் அடிப்படையில் அவரது பெயரில் பெயர் மாற்றம் கோரி கிராமியம் –II செந்துறை உதவி பொறியாளர் அலுவலகத்தில் 25.1.2014 அன்று அவர் அளித்த ஆவணங்கள் சுய பணி நிமித்தம் காரணமாக உதவி பொறியாளர் வெளியூர் சென்ற காரணத்தினால் 27.1.2016 அன்றே உதவி பொறியாளரால் அவரது ஆவணங்களை பரிசீலிக்க முடிந்தது. ஆனால், 26.1.2016 அன்றே மேற்படி பதிவிற்கு 90 நாள் அறிவிப்பு கடிதம் முடிந்து 5 ஆண்டுகள் முடிவு பெற்றதாகவும் மேலும் அவரது பெயரில் உள்ள பொது அதிகாரப்பத்திர அடிப்படையில் பெயர் மாற்றம் செய்ய இயலாது எனவும் தெரிவித்தனர்.

4.3 இந்த பொது அதிகாரப் பத்திரம் (Power of attorney) செல்லாது என்ற தகவலே அவர் பெரம்பலூர் மின்சார நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் முறையீடு செய்த பிறகு தான் செந்துறை மின் வாரியத்தினரால் அவருக்கு தெரிவிக்கப்பட்டது.

4.3 இந்த பெயர் மாற்றம் தொடர்பாக செந்துறை மின் வாரியத்தினரை அணுகி அனைத்து ஆவணங்களையும் அளித்து 2.5.2013 முதல் முறையாக அணுகி வருகிறார். அவ்வப்போது கேட்ட அனைத்து ஆவணங்களையும் அளித்து விட்டார். அவரது பெயருக்கு பெயர் மாற்றம் தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் சுமார் 3 ஆண்டுகளாக எடுக்காமல் கால தாமதம் செய்து விட்டு அவர் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் அணுகிபோது தான் இந்த பொது அதிகாரப்பத்திரம் செல்லாது என்ற தகவலையே அதையும் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் மூலமாகத்தான் தெரியப்படுத்தினர்.

4.4 இதை முன்கூட்டியே அவருக்கு அறிவித்திருந்தால் அதற்கு உண்டான நடவடிக்கையை எடுத்திருப்பார் என தெரிவித்தார். ஏனெனில் முதன்முதலில் 1989ல் விண்ணப்பம் செய்த முருகேசன் த/பெ பெருமாள் படையாச்சி அவரது மருமகனின் தந்தை (சம்மந்தி) ஆவார். இவர் தான் குடும்ப செலவுக்காக பெற்ற பணத்திற்காக தான் இந்த நிலத்தை (324/8c–புல எண்) ராசாங்கம் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்தார்.

4.5 காலப்போக்கில் இந்த நிலத்தை அவரது மருகமகனின் ஒத்துழைப்புடன் மீட்டெடுத்தார். மேலும், இந்த சொத்தின் மீது முருகேசன் அவர்கள் மேலும் கடன் செய்து விடாதிருக்க அவரது மருமகனின் (முருகேசனின் மகன்) நலன் கருதியே அவரது பெயரில் பொது அதிகாரப் பத்திரம் பெற்று பாதுகாத்து வந்தார். மற்றப்படி இந்த சொத்தை முருகேசனின் குடும்பத்தினரே அனுபவித்து வருகின்றனர்.

4.6 ஆகவே, அவரது மேல்முறையீட்டை ஏற்றும் ஆழ்துளை கிணறு அமைத்து குழாய் அமைக்க உண்டான செலவை கருதியும் அவரது பெயருக்கு மின்இணைப்பை வழங்க வேண்டுமாறு கேட்டு கொள்கிறார். அதே நேரத்தில் பொது அதிகாரப்பத்திரம் செல்லாது என்றால் 2013 லிருந்தே விண்ணப்பித்த அவரது விண்ணப்பம் கருதி அந்த நிலத்திற்கு அவரது பெயருக்கு கிரையம் பெற கால அவகாசமோ அல்லது அவரது சம்மந்தி பெருக்கு கிரையம் மாற்றி அவரது பெயரில் மின் இணைப்போ வழங்க ஆவண செய்யும்படி வேண்டுகிறார்.

4.7 நாட்டின் முதுகெலும்பான விவசாயம் செய்யும் விவசாயின் நலன் கருதி அவருக்கு பாதிப்பில்லாத நடவடிக்கை எடுத்து அவரது வாழ்வில் ஒளியேற்ற பணிவுடன் வேண்டுகிறார்.

5.0 <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்:</u>

5.1 திரு. க. முருகேசன் த/பெ பெருமாள் படையாச்சி பெரியாக்குறிச்சி அஞ்சல் அவர்கள் தனக்கு சொந்தமான பெரியாக்குறிச்சி வருவாய் கிராம புல எண்.324/8C என்ற புல எண்ணில் அமைந்துள்ள ஆழ்குழாய் கிணற்றுக்கு 10.0 HP விவசாய மின்இணைப்பு வேண்டி பதிவு செய்துள்ள விண்ணப்ப

பதிவு எண்.121/29.1.1989 ஐ திரு. மு. இளங்கோவன் த/பெ முருகபடையாச்சி பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய கோரியுள்ளார்

5.2 மேற்படி புல எண்.324/8C பெரியாக்குறிச்சி என்பது கடந்த 24.1.2007 அன்று திரு. பெ. முருகேசன் த/பெ பெருமாள் படையாச்சி அவர்களிடமிருந்து திரு. இரா. இராஜாங்கம், த/பெ இராமசாமி படையாச்சி சோழன்பட்டி அவர்களுக்கு கிரையம் செய்து தரப்பட்டுள்ளது

5.3 மேற்படி நிலத்தை திரு இரா. இராஜாங்கம், த/பெ இராமசாமி படையாச்சி அவர்களிடமிருந்து மேல்முறையீட்டாளர் திரு. மு. இளங்கோவன் த/பெ முருக படையாச்சி பெரியாக்குறிச்சி அவர்கள் பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் பட்டா மாற்றம் செய்துள்ளர்.

5.4 29.5.1989ல் பதிவு செய்யப்பட்ட விவசாய விண்ணபத்திற்கு மின்இணைப்பு வழுங்கும்பொருட்டு தயார் நிலைப்பதிவு செய்ய கடந்த 29.10.2010ல் அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

5.5 மேல்முறையீட்டாளர் திரு. எம். இளங்கோவன் அவர்கள் கடந்த 2.5.2011 அன்று மேற்படி விண்ணப்ப பதிவை தனது பெயருக்கு பெயர்மாற்றம் செய்து தரக்கோரி கிராமியம்–2 செந்துறை பிரிவு அலுவலரிடம் ஆவணங்களை சமர்ப்பித்துள்ளார். அதை ஆய்வு செய்த அலுவலர் அதில் கிரைய பத்திர நகல் மற்றும் சில ஆவணங்கள் இல்லை என்பதை சுட்டிகாட்டி அவற்றையும் பெற்று சமர்ப்பிக்க மேற்படி நாளிலேயே அறிவுறுத்தி உள்ளார்.

5.6 திரு. எம். இளங்கோவன் அவர்கள் மேற்படி ஆவணங்கள் சமர்ப்பிக்க தவறியதால் கடந்த 20.1.2014 அன்று எழுத்து மூலமாக மீண்டும் அறிவுறுத்தியுள்ளார். பின்னர் திரு. எம். இளங்கோவன் அவர்கள் கடந்த 24.2.2014, 26.5.2015 ஆகிய தினங்களிலும் அலுவலம் வந்து கூடுதல் ஆவணங்கள் ஏதும் இன்றி பழைய ஆவணங்களுடனையே வந்ததால் மேல் நடவடிக்கை ஏதும் எடுக்க இயலவில்லை.

5.7 இறுதியாக கடந்த 25.1.2016 அன்று அலுவலகம் வந்து தான் ஏற்கனவே கொண்டுவந்த ஆவணங்களையே மீண்டும் சமர்ப்பித்து அன்று பொறுப்பிலிருந்த அலுவலரிடம் தான் கிரையம் பெறாமல் பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் பட்டா மாற்றம் செய்ததை ஏற்று பெயர்மாற்றம் செய்யுமாறு கோரி புதிய ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்கப்படாததாலும் மேற்படி விண்ணபத்துக்கு தயார்நிலை பதிவு செய்ய 26.1.2016 அன்றுடன் அதாவது அறிவிப்பு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடைசி நாளிலிருந்து ஐந்து வருடங்கள் நிறைவடைந்து விட்டமையாலும் மின் வாரிய விதிகளின்படி மேற்படி மனு மீது நடவடிக்கை மேற்கொள்ள இயலவில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

6.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை :</u>

6.1 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தங்களுடைய வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 23.6.2016 அன்று மின்குறைதீர்ப்பாளர் முன்பாக கேட்புரை நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளர் திரு. M. இளங்கோவன் அவர்கள் கலந்து கொண்டு, தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர்–1. திரு. த. தேவேந்திரன், செயற்பொறியாளர்/அரியலூர், எதிர்மனுதாரர்–2. திரு. M.கணேசன், உதவி செயற்பொறியாளர்/செந்துறை மற்றும் எதிர்மனுதாரர்–3 திருமதி. M.செல்லப்பாங்கி, உதவி பொறியாளர்/ஊரகம்/செந்துறை ஆகியோர் கலந்து கொண்டு தங்களது தரப்பு வாதத்தை எடுத்துரைத்தனர்.

**7.0 <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்:</u>**

7.1 மேல்முறையீட்டாளர் திரு. எம். இளங்கோவன் அவர்கள் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 மேல்முறையீட்டாளர் மேற்கண்ட பெரியாக்குறிச்சி சர்வே எண்.324/8Cல் உள்ள நிலம் அவரால் 6.6.2011 நாளிட்ட பொது ஆவணப் பத்திரம் மூலம் உரிமை பெறப்பட்டு சிட்டா அடங்கலில் பெயர் மாற்றம் செய்துள்ளதாகவும் திரு. முருகேசன் அவர்களின் குடும்பம் தான் மேற்கண்ட சொத்தை அனுபவித்து வருவதாகவும் தெரிவித்து மேற்கண்ட திரு. முருகேசன் பெயரிலுள்ள விவசாய மின்சார விண்ணப்பத்தை அவரின் பெயருக்கு மாற்றி தரவேண்டும் என்று வாதிட்டுள்ளார்.

7.3 மேலும், பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் பெயர் மாற்றம் செய்ய முடியாது என்பதை அவர் பெயர் மாற்றம் கோரி விண்ணப்பித்த உடன் அதாவது 2013ம் ஆண்டில் தெரிவித்திருந்தால் அவர் உரிய நடவடிக்கை எடுத்திருக்க முடியும். ஆனால், மேற்கண்ட தகவல் விவசாய விண்ணப்பத்திற்கு தயார் நிலையை பதிவு செய்ய அறிவிப்பு வழங்கி கடிதத்தின் கடைசி நாளிலிருந்து 5 வருடங்களுக்குள் தயார்நிலையை பதிவு செய்யவில்லை எனில் அந்த விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டுவிடும் என்ற காலவரை முடிந்த பின்பு தெரிவித்துள்ளதால் அவர் வேறு நடவடிக்கை எடுக்க முடியாது என்பதை கருத்தில் கொண்டு தனக்கு மேலும் கால அவகாசம் வேண்டும் என்றும் வாதிட்டுள்ளார். பொது அதிகாரப்பத்திரம் பெற்று இருந்தாலும், அவர்தான் அந்த நிலத்தின் உரிமையாளர் என்றும் வாதிட்டுள்ளார்.

7.4 ஒரு விவசாய மின் இணைப்பு பதிவு செய்யப்பட்டு சுமார் 15 முதல் 20 வருடங்கள் கடந்த பின்புதான் இணைப்பு பெறமுடியும் என்பதால் அவருடைய விண்ணப்பத்தை ஒரு சிறப்பு நிகழ்வாக கருதி உரிய கால அவகாசம் வழங்கினால் அவரால் உரிய ஆவணங்களை செலுத்தி பெயர் மாற்றம் செய்து கொள்ள முடியும் என்றும் வாதிட்டார்.

**8.0 <u>எதிர்மனுதாரர்கள் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்:</u>**

8.1 செயற்பொறியாளர்/அரியலூர் அவர்கள் பதிலுரையிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார்.

8.2 செயற்பொறியாளர்/அரியலூர் அவர்கள் திரு. முருகேசன் பதிவு செய்துள்ள விவசாய விண்ணப்பத்தை திரு. இளங்கோவன் பெயருக்கு மாற்ற அந்த நிலத்தை வாங்கிய பதிவு செய்யப்பட்ட விற்பனை பத்திரம் இல்லை என்பதால் சமர்ப்பித்த ஆவணங்கள் அவரிடம் திரும்பவும் ஒப்படைக்கப்பட்டு விட்டது என்பதை தெரிவித்து அதற்கு ஆதாரமாக அவர் ஆவணங்களை பெற்றுக் கொண்டேன் என்று 19.2.2014 அன்று கையொப்பம் இட்டுள்ள கடிதத்தின் நகலை சமர்ப்பித்துள்ளார்.

8.3 மேலும், அதன் பிறகு அவர் அந்த நிலத்தை வாங்கியதற்கு ஆதாரமாக விற்பனை பத்திரத்துடன் எந்த விண்ணப்பமும் சமர்ப்பிக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

8.4 மேலும், பொது அதிகாரப் பத்திரம் வைத்திருப்பவர் நிலத்தின் உரிமையாளர் என்று எடுத்துக் கொள்ளமுடியாது என்பதால் அவரின் பெயர் மாற்றம் கோரும் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றும் வாதிட்டார்.

8.5 மேலும், வாரிய விதிகளின்படி தயார்நிலையை பதிவு செய்ய கொடுக்கப்பட்டுள்ள அறிவிப்பு கெடுதேதி முடிவடைந்து ஐந்து வருடங்களுக்குள் விண்ணப்பதாரர் தன்னுடைய தயார்நிலையை பதிவு செய்யாவிடில் அந்த விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டுவிடும். இந்த மேல்முறையீட்டாளர் பெயர் மாற்றம் கோரும் விண்ணப்பத்திற்கு தயார்நிலையை பதிவு செய்ய அறிவிப்பு கடிதம் 29.10.2010 அன்று அனுப்பப்பட்டுள்ளது. அந்த விண்ணபத்திற்கு தயார்நிலையை பதிவு செய்ய கால அவகாசம் 26.1.2016 அன்று முடிவடைந்துவிட்டது என்றும், மேல்முறையீட்டாளர் 25.1.2016 அன்று சமர்ப்பித்த விண்ணப்பத்துடனும், விற்பனை பத்திரம் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால் அவர் மனு மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

## 9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு:</u>

9.1 இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும் பொழுது கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

(i) ஒரு புதிய விவசாய மின்இணைப்பை வழங்க வேண்டும் எனில் பின்பற்றப்படவேண்டிய விதிமுறை என்ன ?

(ii) பொது அதிகாரம் உள்ளவருக்கு விவசாய மின்இணைப்பு வழங்க முடியுமா ?

(iii) மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான விவசாய விண்ணப்பத்தின் பெயரை அவரின் பெயருக்கு மாற்றி வழங்க வேண்டும் என்பது ஏற்புடையதா ?

**10.** **<u>வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வு</u>**

**10.1** ஒரு புதிய விவசாய மின் இணைப்பை வழங்க வேண்டும் என்றால் பின்பற்றப் பட வேண்டிய விதி என்ன என்பதை அறிந்து கொள்ள நாம் தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித் தொகுப்பின் விதி 27(2) ஐ ஆராய வேண்டும். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*" 27 Requisitions for Supply of Energy :*
*xxx xxx xxx*
*(2) Supply to Agricultural category: Application for supply to agriculture category shall be in Form 2 of Annexure III. In respect of the agricultural category, this provision shall be governed by the directives issued by the Commission from time to time, on the basis of the guidance on this matter by the National Electricity Policy (as stipulated in sub section 4 under section 86 of the Act) and the policy directions in public interest given by the State Government under sub section (1) of section 108 of the Act."*

**10.2** மேற்கண்ட விதியை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது வேளாண்மை வகையின மின் வழங்கலுக்கு பின்னிணைப்பு – III இல் உள்ள படிவம் 2 இல் நுகர்வோர் விண்ணபத்தை தரவேண்டும். வேளாண்மை வகையினத்தை பொருத்த வரையில் (சட்டத்தின் 86 ஆம் சட்ட பிரிவில் உள்ள துணைப்பிரிவு (4) இன்படி) இப்பொருள் தொடர்பாக தேசிய மின்சார கொள்கை வழிகாட்டுதலையும், சட்டத்தின் 108 இன் பிரிவிலுள்ள துணைப் பிரிவு (1) இன்படி மாநில அரசு பொது நலங் கருதி வெளியிடும் கொள்கை வழிகாட்டுதலையும் அடிப்படையாக கொண்டு, ஒழுங்குமுறை ஆணையம் விதிக்கும் ஆணையின்படியும் இருக்க வேண்டும்.

**10.3** இங்கே, விண்ணப்ப படிவம், பின்னிணைப்பு III இல் உள்ள படிவம் IIன் படி இருக்க வேண்டும் என்று மின்சார பகிர்மான விதித் தொகுப்பின் விதி 27 (2) இல் கூறியுள்ளதால் அந்த படிவம், கீழே தரப்பட்டுள்ளது.

*FORM-2*
*Application Form for Agriculture Service connection [refer clause 27(2)]*

*APPLICATION FOR SUPPLY OF POWER TO AGRICULTURAL PUMP SETS*

*(Note: The application should be signed by the owner of the well, if there are partners, all must sign or consent to be given by co- owners)*

*To*

*The Designated Engineer,*

*(Address of the Licensee's Distribution Centre)*

*1. Name of owner of the well or partners*

*2. Full residential address of the owner or partners*

*3. S.F. No. in which the well is situated*

*4. Revenue village name, Taluk and District*

*5. Area and type of land to be irrigated by this well (Wet / Dry)*

*6. Horse Power of motor pump sets proposed to be installed.*

*7. Type of pump set (Centrifugal/ Submersible/ Air compressor)*

*8. Consent to abide by R&C of Licensee with regard to duration of supply*

*It is certified, I am the sole owner of the well / this application is signed by all partners*

Place :

Date :

Signature of Applicant/ Partners

Note : The document such as FMB map showing the location of the well, patta, chitta, adangal etc., shall be enclosed with the application.

Date of receipt in the
Office of the Engineer,

---

Certified that the open well/bore well and lands measuring...............................acres and...........cents in S.F.No.............Village.........of.................Taluk is Exclusively owned Thiru...............................................s/o..........of Village.
Jointly owned by

List of owners (1)…………………...s/o………………………..
(2) ……………………….. s/o………………………..
(3) ………………………...s/o………………………...
Certified that Thiru ………………………...s/o………………………..
is small / big farmer(s)

Village Administrative Officer.

**11.4** மேற்கண்ட படிவத்தை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது குறிப்பு (Note) என்ற தலைப்பின் கீழ் விண்ணபத்தில் கிணற்றின் உரிமையாளர் கையொப்பமிட வேண்டும் என்றும் பங்குதாரர்கள் இருந்தால் அனைவரும் கையொப்பமிட வேண்டும் அல்லது அவர்களின் கையொப்பமிட்ட சம்மத கடிதத்தை இணைக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கிணற்றிற்கு விண்ணப்பதாரர் மட்டும் உரிமையாளர்/கிணற்றின் உரிமைதாரர்கள் அனைவரும் கையொப்பம் இட்டுள்ளனர் என்றும் விண்ணப்பதாரர் சான்று அளிக்க வேண்டும். மேலும், விண்ணபத்தில் கிராம நிர்வாக அலுவலரால், மேற்கண்ட கிணறும் அது அமைந்த இடத்தின் உரிமையாளர்களின் பட்டியல் சான்று அளிக்கப்பட வேண்டும் என்றும் அறிய முடிகிறது. எனவே, விண்ணப்ப படிவத்தின்படி கிணற்றின் உரிமையாளர்தான் ஒரு விவசாய மின் இணைப்பு கோரி விண்ணப்பம் சமர்பிக்க முடியும் என்பது மின்சார பகிர்மான விதி 27(2)ன்படி என்று தீர்வு செய்யப்படுகிறது.

11. <u>வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வு</u>

11.1 இந்த மேல்முறையீட்டாளர் பெரியகுறிச்சி கிராம புல எண்.324/8C என்ற நிலத்திற்கு பொது அதிகார ஆவணத்தின் மூலம் பொது அதிகார முகவராக திரு. ஆர். ராசாங்கம் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளதால் தன்னுடைய பெயருக்கு மேற்கண்ட நிலத்தை திரு. ராசாங்கம் அவர்களுக்கு விற்பனை செய்த திரு. முருகேசன் அவர்கள் பதிவு செய்துள்ள விவசாய விண்ணப்பத்தை பெயர் மாற்றம் செய்து மின்இணைப்பு வழங்க வேண்டும் என்று வாதிட்டுள்ளார்.

11.2 எதிர்மனுதாரர் பெரியாக்குறிச்சி புல எண்.324/8C என்ற நிலம் மேற்கண்ட திரு. முருகேசன், த/பெ பெருமாள் படையாச்சி என்பவரிடமிருந்து திரு. இரா. இராசாங்கம் த/பெ இராமசாமி படையாச்சி சோழன்பட்டி அவர்களுக்கு கிரையம் செய்து தரப்பட்டுள்ளது. மேற்படி நிலத்தில் திரு. இரா. இராசாங்கம் அவர்கள் திரு. இளங்கோவன் அவர்களை பொது அதிகார முகவராக பதிவு செய்துள்ளார். எனவே, அவர் நிலத்தின் சொந்தக்காரர் அல்ல என்பதால் பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் திரு. இளங்கோவன் பெயரில் விவசாய விண்ணப்பத்தை பெயர் மாற்றம் செய்ய முடியாது என்று வாதிட்டுள்ளார்.

11.3 இந்த வழக்கில் பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் விவசாய விண்ணப்பத்தை பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்று கோருவதால் அந்த 6.6.2011 நாளிட்ட 4/2011 என்று பதிவு செய்யப்பட்ட பொது ஆவணத்தின் குறிப்பிடப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*<u>"பொது அதிகார ஆவணம்</u>*

*2011ஆம் ஆண்டு ஜுன்மாதம் 06 உ ஆறு தேதி அரியலூர் மாவட்டம், செந்துறை, வட்டம், பெரியாக்குறிச்சி கிராமத்தில் வசிக்கும் லேட் முருக படையாச்சி மகன் விவசாயம் இளங்கோவன் (வா.அ.எண்.KLP1055409) அவர்களுக்கு*

*ஷை செந்துறை வட்டம், மணக்குடையான் மதுரா, சோழன்பட்டி கிராமம், தெற்குத்தெருவில் வசிக்கும் ராமசாமி படையாச்சி குமாரர் விவசாயம் ராசாங்கம் (கு.அ.எண்.16/G/0066785) ஆகிய நான் எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவணம்*

*என்னவென்றால், தாங்கள் என் உற்ற மனுஷாள் ஆனதாலும் மற்றும் நான் வெளியூர் செல்ல வேண்டி இருப்பதாலும் கீழ்கண்ட சொத்தை நான் சென்ற 25.1.2007ல் கிரையம் பெற்று அது செந்துறை சப்ரி ஆபிசில் 1 புத்தகம் 169/2007 ஆக பதிவு செய்து சர்வசுதந்திரமாய் நான் ஆண்டனுபவித்து வரும் இதனடியில்கண்ட சொத்தை நான் நேரிலிருந்து பரிபாலனம் செய்ய என்னால் இயலாததாலும் மேற்கண்ட காரியங்களை செய்வதற்கு தங்களை என் பொது அதிகார முகவராக நியமித்து கீழ்கண்ட சொத்துக்களை ஈடு, ஒத்தி, ஜாமின் கடன், கிரையம், ஆகிய ஆவணங்கள் செய்வதற்கும் ஷை சொத்துக்களை கிரையம் பேசி அட்வான்சு தொகையை வாங்கவும், எகிரிமெண்டு எழுதிக்கொடுக்கவும் எனது சார்பாகவும், மேல்கண்ட ஆவணங்கள் அனைத்தும் எழுதிக் கொடுக்கவும் ஷை ஆவணங்களில் கையெழுத்து போட்டு சார் பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்யவும், தாக்கல் செய்ததை ஒப்புக்கொள்ளவம், ஷை ஆவணங்களின் தொகைகளை பெற்றுக் கொள்ளவும் மற்றும் ஷை ஆவணங்களை பூர்த்தி செய்வதற்குரிய சகல நமூனா பாரங்களிலும் எனக்காக கையெழுத்து போட்டு ஷை ஆவணங்களை பூர்த்தி செய்ய சகல அதிகாரங்களையும் இதன் மூலம் நான் தங்களுக்கு கொடுத்திருக்கிறேன் மற்றும் கிரையம் பெற்றவர் கீழ்கண்ட சொத்தை சுவாதீனம் செய்து கொடுக்கவும் தங்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறேன். ஷை ஆவணங்களின் தொகைகளை பெற்றுக் கொள்ளவும் மற்றும் ஆவணங்களை பூர்த்தி செய்வதற்குரிய சகல நமூனா பாரங்களிலும் எனக்காக கையெழுத்து போட்டு ஷை ஆவணங்களை பூர்த்தி செய்ய சகல அதிகாரங்களையும் இதன் மூலம் நான் தங்களுக்கு கொடுத்திருக்கிறேன். தாங்கள் எனது பவர் ஏஜெண்ட்*

*முறையில் பெறும் தொகைகளுக்கு சரியான கணக்குகளை தாங்கள் வைத்தும் வரவு செலவு பராமரித்து ஷை கணக்குகளை என்னிடம் ஒப்படைக்க வேண்டியது. ஷை சொத்தின் பேரில் ஏதேனும் வில்லங்கம் ஏற்பட்டு நடவடிக்கை எடுக்க நேர்ந்தால் வழக்கறிஞரை நியமித்து வக்காலத்து போடவும் வழக்கு நடத்தவும் தேவை ஏற்பட்டால் வழக்கை ராசி செய்து கொள்ளவும் மேல்முறையீடு செய்ய நேரிட்டால் அதனை மேற்கொள்ளவும் இதன் மூலம் தங்களுக்கு அதிகாரம் அளித்துள்ளேன். இனி கீழ்கண்ட சொத்தைப் பொறுத்து தாங்கள் எடுக்கும் சகல நடவடிக்கைளும் நானே நேரில் இருந்து செய்ததாக ஒப்புக்கொண்டு இந்த பொது அதிகாரப் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளேன். இந்த ஆவணத்திற்காக எவ்வித பிரதி பிரயோஜனமும் நான் தங்களிடம் பெற்றுக் கொள்ளவில்லை. இந்தப்படி நான் ஏகமனதாக சம்மதித்து எழுதிக் கொடுத்த ஜெனரல் பவர் ஆப் அட்டர்னி என்னும் பொது அதிகாரப் பத்திரம்.*

**11.4** மேற்கண்ட பொது ஆவணத்தின் சரத்துகளை படித்து பார்க்கும்பொழுது நாம் அறிவது , திரு. இளங்கோவன் அவர்களை திரு. ஆர். ராசாங்கம் அவர்களால் மேற்கண்ட சொத்திற்கு பொது அதிகார முகவராக நியமித்துள்ளார் என்றும் அவர் திரு. இராசாங்கம் அவர்களின் சார்பாக மேற்கண்ட சொத்துக்களை ஈடு, ஒத்தி, ஜாமின், கடன், கிரையம் ஆகிய ஆவணங்கள் செய்வதற்கும் மேற்படி சொத்துக்களை கிரையம் பேசி, அட்வான்ஸ் வாங்கவும் எக்ரிமெண்ட் எழுதி கொடுக்கவும் அவரது சார்பாக மேற்கண்ட ஆவணங்களின் கையெழுத்து இடவும் அவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், திரு. ஆர். ராசாங்கம் அவர்கள் பவர் ஏஜெண்ட் என்ற முறையில் பெறும் தொகைகளுக்கு சரியாக கணக்கு பராமரித்து அவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**11.5** மேலும், *Power of Attorney Act* 1882 *Power of Attorney* என்பதின் விளக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"IA Definition:*

*In this act, "Power of Attorney" includes any instruction empowering a specified person to act and in the name of the person executing it"*

**11.6** மேற்கண்ட விளக்கத்தின்படி ஒரு பொது அதிகார ஆவணம் என்பது அதிகார ஆவணத்தை வழங்குகின்ற ஒருவரின் சார்பாக அந்த அதிகாரத்தை பெறுபவர் செயல்படலாம் என்று அதிகாரம் வழங்கும் ஆவணம் ஆகும்.

**11.7** என்னுடைய வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வின்படி ஒரு விவசாய விண்ணபத்தை ஒரு கிணற்றின் உரிமையாளர்தான் விண்ணப்பிக்க முடியும் என்று தெரிகிறது.

**11.8** ஒரு பொது அதிகார பெற்ற முகவர் உரிமையாளரின் சார்பாக ஆவணங்களில் கையெழுத்து போடுவதற்குதான் உரிமம் பெற்றுள்ளார். ஆனால், அந்த சொத்தின் உரிமையாளர் அல்ல என்பதால் அவரின் பெயருக்கு விவசாய விண்ணபத்தின் பெயர் மாற்றம் என்பது ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது.

12. <u>வழக்கெழு வினா மூன்றிற்கான தீர்வு</u>

12.1 வழக்கெழு வினா ஒன்று மற்றும் இரண்டிற்கான தீர்வின்படி ஒரு குறிப்பிட்ட சொத்தின் பால் பொது அதிகாரம் பெற்ற முகவர் அந்த சொத்தின் உரிமையாளர் இல்லை என்பதால் அந்த சொத்தில் உள்ள கிணற்றிற்கு முந்தைய உரிமைதாரரால் பதிவு செய்யப்பட்ட விவசாய விண்ணப்பத்தை அவரின் பெயருக்கு மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது.

13. <u>முடிவுரை</u>

13.1 வழக்கெழு வினா ஒன்று, இரண்டு மற்றும் மூன்று தீர்வின்படி பெரம்பலூர் மின் பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்வில் மாற்றம் எதுவும் செய்ய முடியாது என்று தீர்வு செ ய்யப்படுகிறது.

13.2 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண்.29/2016 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

(ஆ. தர்மராஜ்)
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்

1) திரு. M. இளங்கோவன்,
த/பெ முருகப்படையாச்சி,
பெரியாக்குறிச்சி அஞ்சல்,
செந்துறை வட்டம்,
அரியலூர் மாவட்டம் – 621 719.

2) செயற்பொறியாளர்/ இ&ப/அரியலூர்,
பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
56, ராஜாஜி நகர், கல்லூரி சாலை,
அரியலூர் – 621 713.

3) உதவி செயற்பொறியாளர்/இ&ப/செந்துறை,
பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11 கே.வி. துணை மின் நிலைய வளாகம்,
செந்துறை அஞ்சல் & தாலுகா,
செந்துறை – 621 714.

4) உதவி பொறியாளர்/ இ&ப/செந்துறை,
பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11 கே.வி. துணை மின் நிலைய வளாகம்,
செந்துறை அஞ்சல் & தாலுகா,
செந்துறை – 621 714.

5) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நான்கு சாலை, துரைமங்கலம், பெரம்பலூர்.

6) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

7) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

8) உதவி இயக்குநர் (கணினி) – **<u>மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.